# சர்வவியாபி

MISSION PRESS 1840
PONDICHERRY

SARVA VIABI

ESTD:1.3.1907
(Year-115)

| 18-09-2022 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | சுபகிருது வருடம் (புரட்டாசி 2) | வருட சந்தா ₹ 200<br>தனிப்பிரதி ₹ 6 |
|---|---|---|---|---|

| புத்தகம் 59 | இதழ் 37<br>பக்கம்-12 | e-mail:missionpress48@gmail.com<br>e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/ 2334360 | ஆசிரியர் : பேரருள்பணி ஆ. அருளானந்தம்<br>துணை ஆசிரியர் : அருள்பணி L.ஆரோக்கியதாஸ் |
|---|---|---|---|---|


## கல்வி, எப்போதும் உண்மையைத் தேடுவதாய் இருக்க வேண்டும்

**“மாணவர்களாகிய நீங்கள் இறைவார்த்தையின் மாணவர்களா? விவி-யத்தை, நற்செய்தியை வாசிக்க சிறிது நேரம் ஒதுக்குகிறீர்களா?”** - சுவிட்சர்லாந்து மாணவர் அமைப்பினரிடம் திருத்தந்தை பிரான்சிஸ்



கல்வி எப்போதும் உண்மையைத் தேடுவதாய் அமைந்திருக்கவேண்டும் என்று செப்டம்பர் 12, திங்களன்று வத்திக்கானில் சுவிட்சர்லாந்து நாட்டு மாணவர் சமுதாய அமைப்பின் 160 உறுப்பினர்களை சந்தித்தபோது கூறியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

சுவிட்சர்லாந்து நாடு மற்றும் அந்நாட்டு மாணவர் சமுதாய அமைப்பின் பாதுகாவலருமான Nicola di Flüe அவர்கள் புனிதராக அறிவிக்கப்பட்டதன் 75ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு உரோம் நகருக்கு திருப்பயணம் மேற்கொண்டுள்ள இம்மாணவர்களுக்கு உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், “**திருப்பயணிகளாக இருப்பது என்பது, உண்டு உடுத்தி வாழ்வதில் திருப்தி அடைந்துகொண்டிருப்பது அல்ல, மாறாக உண்மையாகவே வாழ்வதற்கு விரும்புவதாகும்**” என்று கூறியுள்ளார்.

**படிக்கும் வாய்ப்பு:**

“உலகில் பலருக்கு, குறிப்பாக பெண்களுக்கு கல்வி கற்க வாய்ப்பு இல்லாதபோது, உங்களுக்கு கிடைத்துள்ள வாய்ப்புக்கு கடவுளுக்கு நன்றி கூறுவோம். கல்வி கற்பதற்கு இருக்கின்ற உலகளாவிய உரிமை செயல்வடிவம் பெறுவதற்கு, சில தெளிவான நடவடிக்கைகள் வழியாக ஊக்கப்படுத்துங்கள்.

மாணவராக இருப்பது, திருப்பயணியாக இருப்பது, இவை இரண்டிற்கும் இடையே ஓர் அழகான ஒப்புமை உள்ளது. படிப்பது ஒரு பயணம், மாணவர்கள் என்பது ஒருவிதத்தில் வாழ்வு முழுவதுமே மாணவராக, கற்றுக்கொண்டே இருப்பது என்பதை இந்த அமைப்பு நினைவுபடுத்துகிறது. ஒரு மனித மனநிலையாக, படிக்கும் படிப்பு, எப்போதும் பேணி வளர்க்கப்படவேண்டும். இயேசு கிறிஸ்துவே, வரலாற்றில் மிகப்பெரும் ஆசிரியர் என்பதை நாம் மறத்தலாகாது.

**நீங்கள் இறைவார்த்தையின் மாணவர்களா?**

இறைத்தந்தையின் அன்பு மற்றும் தூய ஆவியாரின் செயலால் இயேசு, பழைய மனிதரை எடுத்துவிட்டு புதிய மனிதரைக் கொணர்கிறார். அவர், தான்மை என்ற அடிமைமுறையிலிருந்து விடுதலையளித்து கடவுளோடு உள்ள உறவில் வாழ்வின் முழுமையை நமக்குத் திறந்து காட்டுகிறார். மனித வாழ்வை நமக்கு நிறைவாகத் தருகிறவர் இயேசு ஒருவர் மட்டுமே (யோவா 10:10). **மாணவர்களாகிய நீங்கள் இறைவார்த்தையின் மாணவர்களா? விவிலியத்தை, நற்செய்தியை வாசிக்க சிறிது நேரம் ஒதுக்குகிறீர்களா? ஒருவித தாகத்தோடு பயணம் செய்பவர்களாகிய நீங்கள், கடவுளைத் தேடுபவர்கள் என உணருகிறீர்களா? இயேசுவின் சீடர்கள் என உணர்ந்து, அவர் பேசுவதைக் கேட்கின்றீர்களா, அவரிடம் கேள்வி கேட்கின்றீர்களா, அவரது சொல்லாடல்களையும் செயல்களையும் தியானிக்கின்றீர்களா?**

இயேசுவை நினையுங்கள், உங்கள் நினைவுகளிலும் இதயங்களிலும் அவர் நுழைய அனுமதியுங்கள், ஏனென்றால் அவர் நம் அனைவரின் இதயக் கதவைத் தட்டிக்கொண்டிருக்கிறார்” என்றுரைத்து கல்வி பற்றிய தன் உரையை நிறைவு செய்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

ஆசிரியர் பேனா...

# கற்றுத்தருவோம்

**விலங்கு மனிதர்:** விலங்குகள் வாழ கற்றுக் கொள்வதில்லை. மனிதர் நாம் வாழ கற்றுக்கொள்வது அவசியம். விலங்குகள் தேவையின் அடிப்படையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. சுவாசிப்பது, தன்னியக்கம் (Automovement-விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் நடந்து கொண்டிருக்கின்றது.) பசித்தால் உண்ணும், தாகம் எடுத்தால் நீர் பருகும், ஆபத்து என்றால் தன்னை காத்துக் கொள்ள ஓடிவிடும். இடம் பெயர்ந்து செல்ல கால்களால் நடக்கும். விலங்குகளை கால்நடைகள் என்று குறிப்பிடுகிறோம். மனிதரும் கால்களால்தானே நடக்கின்றோம்? நம்மை விலங்குகள் என்று குறிப்பிடுவதில்லையே ஏன்? மற்ற விலங்குகளில் இருந்து மாறுபட்டு, மனிதர் சிந்தனையினால் இயங்குகிறோம்; அன்பு செய்யவும், அன்பு செய்யப்படவும் ஈர்க்கப்படுகின்றோம். சிந்தனையும் அன்பும் நம்மை மனிதர்களாக வாழ வைக்கின்றன. வாழ்வதற்கு மனிதர் கற்றுக்கொள்வது அவசியமாகிறது.

**மனித படைப்பின் நோக்கம்:** படைப்பாக இருக்கின்ற மனிதர் படைத்தவரின் சாயலாகவும் இருக்கின்றோம் (தொ.நூ.1:26,27). நாம் மனிதராகப் படைக்கப்பட்டதின் நோக்கத்தை திருவிவி-யம் சுட்டிக் காட்டுகிறது. ‘‘கடவுளுக்கு (படைத்தவருக்கு) அஞ்சி நட; அவருடைய கட்டளைகளுக்கு கீழ்படி. இதற்காகவே மனிதர் படைக்கப்பட்டனர். (சஉ. 12:13).

**பாடம்:** ‘உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் முழு ஆற்றலோடும், உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு கூர்வாயாக என்பது முதன்மையான கட்டளை. உன் மீது நீ அன்பு கூர்வது போல், உனக்கு அடுத்திருப்பவர் மீது (அயலாரை) அன்பு கூர்வாயாக என்பது (இதற்கு இணையான) இரண்டாவது கட்டளை (மாற்கு 12:29-31) என்று இயேசு அறிவுறுத்துகிறார். அடுத்திருக்கும் மனிதரோடு எப்படி அன்புறவில் வாழ வேண்டும் என்பதை திருநூல் - லேவியர் புத்தகம் 19ம் அதிகாரத்தை படித்து தெரிந்து கொள்வோம். கடவுளையும், மற்ற மனிதரையும் அன்பு செய்வதுதான் வாழ்க்கை என்று தெளிவு பெற நாம் கற்றுக் கொள்ள வேண்டும், பழக வேண்டும். வாழ்வது ஒரு கலை.

**கற்றுக் கொடுப்போம்:** மறைநூல்களும், தமிழ் இலக்கியங்களும் வாழும் கலையை கற்றுக் கொடுப்பவையாக நமக்கு கொடுக்கப்பட்ட களஞ்சியங்கள், பள்ளிப் பாட திட்டங்களிலே இவை புகுத்தப்பட்டு சிறு(மியர்)வர் உள்ளங்களிலே அவை பசுமரத்து ஆணியாக அடிக்கப்பட்டன. அன்பில் வேரூன்றி அறநெறியோடு வாழ அவை உதவின. பெற்றோர், ஆசிரியர் மற்றும் சமுதாய பெரியோர் அனைவரும் தம் சந்ததியினருக்கு வாழும் கலையை கற்றுக் கொடுப்போராக தங்கள் வாழ்வை பாடமாக்கினர். கடவுள் நம்பிக்கை, மனித நேயம் போன்றவற்றை சிறியோரும், இளையோரும் அவர்களிடமிருந்து கற்றுக் கொண்டனர்.

**உள்ளத்தில் நினை:** ஊன் உடல் வளர்ப்பது வாழ்க்கை அல்ல; உள்ளத்தை பண்படுத்துவதே வாழ்க்கை. வாழ்வின் தொடக்கமும், நிறைவுமாகிய கடவுளை அறிந்து கொள்வதும், மனிதரோடு நல் உறவில் வளர்வதும் வாழ்வின் நோக்கம். ‘உன்னைப் படைத்தவரை உன் இளமைப் பருவத்தில் மறவாதே (சஉ.2:1)... மண்ணின்று வந்த உடல் மண்ணுக்கே திரும்பும் முன்னும், கடவுள் தந்த உயிர் அவரிடமே திரும்பும் முன்னும் உன்னைப் படைத்தவரை உள்ளத்தில் நினை’ (சஉ.12:7).

கடவுளுக்கு முக்கியத்துவம் வாய்ந்த மனிதர் கடவுளை மறந்து வாழ்வது வேதனைக்குறியது என்று திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிடுகின்றார். ‘‘மக்கள் கடவுள் நம்பிக்கையில் ஆர்வம் கொள்வதில்லை (Pope to Catechists Share a living, experience of faith-11.9.2022 Angelus).

பொருள் சேர்ப்பதில் வேட்கையும், மதிமயங்கச் செய்யும் விளம்பரங்களும், உறவுகளை மறந்து தனிமையில் மூழ்கச் செய்யும் கணினி களியாட்டங்களும், தன்னை மறக்கச் செய்யும் போதை ஊக்கிகளும் இன்றைய சந்ததியினர் மனித பாண்பை இழக்கச் செய்கின்றன. உள்ளத்தை பண்படுத்தும் கடவுள் பக்தி, நம்பிக்கை இளையோருக்கு தேவையற்றதாக மாறிவிட்டது வேதனைக்குறியது.

**ஏமாற்றிக் கொள்பவர்கள்:** மத அடையாளங்களை வெளிப்படுத்துவதும், தெய்வ வழிபாட்டினை சடங்காகச் செய்வதும் கடவுள் நம்பிக்கையாகிவிடாது. வழிபாடும், அடைாளங்களும் வாழ்வில் செயலாக்கம் பெறச் செய்வதுதான் கடவுள் நம்பிக்கை. அடையாளங்களை வெளிப்படுத்தியும், சடங்குகளைச் செய்தும் தாங்கள் கடவுள் நம்பிக்கையுடன் இருப்பவர்கள் என்று தங்களையே ஏமாற்றிக் கொள்பவர்கள் பெருகிவிட்டது சமுதாய சீர்கேட்டிற்கு காரணம் என்பதை புரிந்து கொள்வோம்.

**நம் தோல்வி:** நம் பிள்ளைகள், அருட்சாதன கொண்டாட்டங்களிலும், திருப்ப-யிலும் பங்கேற்று பயனடைய, பண்பட நாட்டம் கொள்வதில்லை என்பது பெரியோரின் வேதனை. குருக்கள் மற்றும் துறவறத்தாரோடு பழகுபவர்களும், நம் நிறுவனங்களில் பணிபுரிந்து பயனடைபவர்களும்கூட கடவுள் நம்பிக்கையில் நாட்டம் கொள்ளாமல் தளர்வுற்றிருப்பது நம் தோல்வியாக கருதப்பட வேண்டும்.

**பாடமாக்குவோம்:** அடிப்படை மறை உண்மைகளையும், மனித பண்புகளையும் நம் சந்ததியினருக்கு கற்றுக் கொடுக்க வேண்டியது நம் கடமை. அதனை செய்யக்கூடிய வழிமுறைகளையும், புதிய உத்திகளையும் கண்டுபிடித்து பயன்படுத்துவோம். கடவுளை அன்பு செய்யவும், மற்றவரை தன்னைப்போல் நேசிக்கவும் பிள்ளைகளுக்கு நம் வாழ்வை பாடமாக்குவோம்.



**25-09-2022**

# வலையில்

அருள்திரு. J. இருதயராஜ்
உதவி பங்குத்தந்தை, இருப்புக்குறிச்சி



ஆமோ 6:1,3-7, 1திமொ 6:1-16 லூக் 16:19-31

இத்தா-யில் கொல்லன் ஒருவன் பெயரோடும், புகழோடும் வாழ்ந்து வந்தான். அவன் உருவாக்குகிற எந்த ஒரு பொருளையும் உடைக்கவோ, சேதப்படுத்தவோ முடியாது. எனவே அவருடைய கடையின் சிறப்பு உலகம் முழுவதும் பரவி இருந்தது. அதுவும் அவரால் உருவாக்கப்பட்ட சங்கி-யை அவராலே உடைக்க முடியாது. அவ்வளவு சிறப்பாக அவருடைய வேலைபாடு இருந்தது. உரோமை பேரரசு ஒரு போரில் தோல்வி கண்டது. பெருத்த சேதத்தையும் அந்த நாடு கண்டது. மதிப்பு மிகுந்த மனிதர்கள் முப்பது பேர் பிணைக் கைதிகளாக பிடிபட்டனர். அவர்களை சங்கி-களால் கட்டி மலையி-ருந்து தூக்கியெறிவதற்காக கொண்டு செல்லப்பட்டனர். அது காட்டு விலங்குகள் அதிகம் வாழும் பகுதி. எனவே அவைகளுக்கு இரையாக்க கொண்டு செல்லப்பட்டனர்.

அப்பொழுது இருப்பத்தொன்பது பேர் அழுது கொண்டிருந்தனர். ஆனால் அந்த கொல்லன் மட்டும் மகிழ்ச்சியோடு இருக்கின்றார். அதுமட்டுமல்ல, ''ஒன்றும் கவலைப்படாதீர்கள் எவ்வளவோ சங்கி-களை உருவாக்கி இருக்கிறேன். எனவே அவர்கள் நம்மை தூக்கிப்போட்டப் பிறகு நான் என்னுடைய சங்கி-களை உடைத்துவிடுவேன். பிறகு உங்களையும் விடுவிப்பேன்'' என்று சொன்னதும் மற்றவர்களும் அமைதி அடைந்தார்கள். பிறகு மலையி-ருந்து காட்டிற்குள் தூக்கி போடுகிறார்கள். சங்கி-யால் பிணைக்கப்பட்ட நிலையில், தூக்கி எறிந்த பிறகு எல்லாரும் அந்த காட்டிலே முயற்சி செய்து நகர்ந்து நகர்ந்து ஒன்று கூடுகிறார்கள். இப்பொழுது கொல்லன் மட்டும் அழுது கொண்டிருந்தார். காரணம் கேட்டதற்கு, ''இந்த சங்கி-களை வேற யாராவது உருவாக்கியிருந்தால் உடைத்திருக்க முடியும். ஆனால் இவை அனைத்தும் என்னால் செய்யப்பட்டவை. இதை உடைக்கவே முடியாது, எனவே கண்டிப்பாக நாம் காட்டு விலங்குகளுக்கு இரையாவது உறுதி'' என்று சொல்லுகிறார்.

இறைஇயேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இந்த உலகில் நாம் வாழ்கிறபோது நம்முடைய செயல்பாடுகளால் பல சங்கி-களை உருவாக்கி கொள்கிறோம். அவற்றி-ருந்து வெளிவர முடியாமல் மாட்டிக் கொள்கிறோம். பணம், பட்டம், புகழ், ஆடம்பரம், அகம்பாவம், உடல் ஆசைகள், தீமையான நட்புறவு, சண்டை சச்சரவுகள், கோபம், மோகம், 'தான்' எனும் தலைக்கனம், நாள் தீராத ஆசைகள் என பல சங்கி-களை உருவாக்கிக் கொள்கிறோம். இறுதியில் வெளி வரமுடியாமல் தவிக்கிறோம். இதனைதான் இன்றைய நற்செய்தி வாசகம் தெளிவுபடுத்துகிறது. செல்வர் தன்னுடைய வாழ்நாளில் உருவாக்கி கொண்ட கண்டுகொள்ளாமை என்ற சங்கி-யினால் அதி-ருந்த தப்பமுடியாமல் அவதிபடுகிறார் (லூக்.16.24) அதுமட்டுமல்ல தன்னுடைய சகோதரர்களும் அதே சங்கி-களை உருவாக்கிக் கொண்டுள்ளனர். அவர்களுக்காகவும் வேண்டுகின்றார் (லூக்16.28). மோசேயும் இறைவாக்கினர்களும் உண்டு அவர்களுக்கு செவிசாய்க் கட்டும் என்ற வழிமுறையும் அவருக்கு கொடுக்கப்படுகிறது. (லூக் 16.31).

**சங்கி-களி-ருந்து தப்பித்து ஓடு:** ''குழந்தாய் பாவம் செய்து விட்டாயா இனிமேல் பாவம் செய்யாதே; பாம்பை கண்டு ஓடுவதுபோல பாவத்தை விட்டு ஓடிவிடு'' (சீராக்.21:1-2). நம்முடைய பலவீனம் நம்மை தீமைக்கு அடிமைபடுத்தி விடுகிறது. தாவீது அரசர் தன் வெற்றி, உலக இன்பம், பெண் ஆசை என்ற வலையில் சிக்கிக்கொண்டதன் விளைவு, கடவுளை விட்டு விலகினார். யூதாவின் பண ஆசை அவனை அழிவுக்கு இட்டுச் சென்றது (மத் 2:3-10). இவைகள் வெளிப்படுத்தும் உண்மை மனிதன் தன்னை சுற்றி ஏதோ ஒரு வகையான சங்கி-யை சுத்திக்கொண்டு வெளியே வரமுடியாமல் தவிப்பதன் வெளிப்பாடு. எனவேதான் புனித பவுல் அழகாக குறிப்பிடுகின்றார். ''நீ, பொருள் ஆசையி-ருந்து தப்பித்து ஓடு, நீதி, இறைப்பற்று, நம்பிக்கை, மன உறுதி, பணிவு ஆகியவற்றை நாடித்தேடு. விசுவாச வாழ்வு போராட்டத்தில் ஈடுபடு நிலைவாழ்வை பற்றிக்கொள் அதற்காகவே அழைக்கப்பட்டிருக்கிறோம்'' (1திமோ 6:11-12).

**சாத்தானின் செயல்பாடு:** பேதுரு தன்னுடைய திருமுகத்திலே அழகாக குறிப்பிடுகிறார். சாத்தான் கர்ச்சிக்கும் சிங்கம் போல எவரை விழுங்கலாம் என காத்துக் கொண்டிருக்கிறது. எப்படி நம்மை சங்கி-யால் நம் பலவீனத்தை கொண்டே பிணைக்கலாம் என்று காத்துக் கொண்டிருக்கிறது. அதனையே இன்றைய முதல் வாசகத்தில் ஆமோஸ் இறைவாக்கினர் தெளிவுபடுத்துகிறார்; ''இன்பத்தில் திளைத்திருப்போரே, கவலையற்றிருப்போரே உங்களுக்கு ஐயோ கேடு'' (ஆமோ 6:1,3). இப்பொழுது மாயையான வலையில் சிக்கி இன்பத்தில் திளைத்திருப்போரே உங்களுக்கு ஐயோ கேடு. இயேசுவும் இதே வார்த்தையை மத்.23:13-33 லூக் 6:124-26 குறிப்படுவார்.

**நம்வாழ்வு:** இயல்பாகவே மனிதன் பல வகையான சங்கி-களினால் பிணைக்கப்பட்டு வாழ்ந்து கொண்டிருப்பதை காணமுடிகிறது. இந்த சூழ-ல் அத்தகைய சங்கி-யால் பிணைக்கப்பட்டு வாழ்ந்த செல்வந்தன் தன்னுடைய முடிவை குறித்து அழுது புலம்புவதைதான் இன்றைய நற்செய்தியில் வாசிக்கக் கேட்டோம்.

இத்தகைய வலையில் சிக்காத ஏழை லாசரை வானதூதர்கள் அரவணைத்து சென்றதுபோல எல்லாம் கடவுள் என்ற நிலையில் வாழ்கிறதுபோது நம்மையும் ஆண்டவர் தம்முடைய தூதர்களாய் பாதுகாப்பார்.



## சுவாமி அமலோரானந்தா



– சுவாமி ஆ. லூயிஸ்.

புதுவைக்கு அருகில் தமிழகத்தில் கல்லேரி என்ற குக்கிராமத்தில் சுவாமி அமலோர் ஜுன் 15, 1932ல் பிறந்தார். அவருடைய மூத்த சகோதரர் மேதகு கர்தினால் லூர்துசாமி பிப்ரவரி 5-ம் தேதி 1924ல் பிறந்து குருவாகி, பேராயராகி, கர்தினாலாகி திருச்சபையில் பணிபுரிந்து ஜுன் மாதம் இரண்டாம் தேதி 2014 உயிர் நீத்து விண்ணகத்தோடும் மண்ணகத்தோடும் சங்கமம் ஆனார்.

சுவாமி அமலோர் திண்டிவனம் புனித அன்னாள் உயர் நிலைப் பள்ளியில் படித்து, கடலூர், புனித ஆக்னஸ் இளங்குரு மடத்தில் சேர்ந்து, புனித வளனார் கல்லூரி திருச்சியில் படித்து 1953ம் ஆண்டு பெங்களூர், புனித இராயப்பர் குருத்துவக் கல்லூரியில் மெய்யியல், இறையியல் படித்து ஏப்ரல் பன்னிரண்டாம் தேதி 1959ம் ஆண்டு குருப்பட்டம் பெற்றார்.

திண்டிவனம் தமிழக முப்பணி நிலையத்தில் வழிகாட்டியாக பணியாற்றி, தோழன் என்ற மாத இதழை ஆரம்பித்து மறுமலர்ச்சிப் பணியை மேற்கொண்டார். 1962ம் ஆண்டு பாரீசுக்கு மேற்படிப்பை மேற்கொள்ள அனுப்பப்பட்டார். மறைக்கல்வி, இறையியல் இவைகளில் முனைவர் பட்டம் பெற்று, மறைமாவட்டத்தில் விரியூர் என்ற பங்கில் துணை குருவாக நியமிக்கப்பட்டார். சிறந்த முறையில் பணி செய்து மக்களை கடவுளிடம் அழைத்துச் சென்றார்.

**இந்தியத் திருச்சபை:** அடித்தளத்தி-ருந்து படிப்படியாக இந்தியத் திருச்சபைக்கு வழிகாட்டியாக 1967ம் ஆண்டு ஆயர் பேரவை அவரை நியமிக்க, பெங்களூரில் தேசிய முப்பணி நிலையத்தை ஆரம்பித்து ஆயர்கள், குருக்கள், துறவிகட்குப் பயிற்சி கொடுத்து, தொடர்ந்து பொது நிலையினருக்கும் பயிற்சி கொடுத்து ஒருங்கிணைந்த மறுமலர்ச்சியை இந்திய அளவில், மாநில அளவில், மறைமாவட்ட அளவில் பணிபுரிந்தார். 1979ம் ஆண்டு மைசூர் பல்கலைக் கழகத்தில் கிறிஸ்தவத்துறையை ஆரம்பித்து போதித்து வந்தார்.

ஜெய இலட்சிமபுரத்தில் ஆரம்பித்தது, பின்பு சாமுண்டி மலை அருகில் “அஞ்ச- ஆசிரமம்” ஆரம்பிக்கப்பட்டு, சுய அனுபவம், இறை அனுபவம் என்பதை வழங்கி புதுப்பித்தல் பணியை அனைவருக்கும், பிறமறையினருக்கும் வழங்கி வந்தார். மே மாதம் 25-ம் தேதி தந்தை பெங்களூர் போகும்போது தனது கார் விபத்தில் அவருடைய உயிர் உடலைவிட்டுப் பிரிந்து சென்றது. அவரது உடல் அஞ்ச- ஆசிரமத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

மைசூர் பல்கலைக் கழகத்தில் கிறிஸ்தவத்துறை என்ற பொறுப்பு, மைசூர் மறைமாவட்டம் கண்காணித்து வருகின்றது. அஞ்ச- ஆசிரமத்தை ஒரு சங்கம் பராமரித்து வருகிறது. சுவாமி அமலோர் வாழ்வு, பணி இவைகளைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது, அவரைப்போல பணிகளையும் வாழ்வையும் மேற்கொள்ள இன்றைய ஆயர்கள், குருக்கள், துறவிகள் மேற்கொண்டால் இந்தியத் திருச்சபை மிகவும் சிறந்த முறையில் சான்று பகர முடியும். எளிமையான வாழ்க்கை முறை, எளிய உணவு, எளிய இல்-டம் என்று இந்தியக் கிறிஸ்தவர்கள் வாழ வேண்டிக் கொள்வோம்.

போட்டி 3

## தூய பேதுரு விவி-ய பொருத்துக சிறப்பு போட்டி – 11 (பொதுத் திருமுகங்கள்)



அருட்சகோதரர் அ.மே.ஜேம்ஸ் - தாராபுரம்

1) உண்மையான கிறிஸ்தவ வாழ்வு – அச்சுறுத்தவில்லை
2) எல்லாவற்றிற்கும் – வாழ்வு பெறுவர்
3) அருளில் – பணிபுரியுங்கள்
4) கடவுள் பார்வையில் – இரக்கம் காட்டுங்கள்
5) அவர் உங்கள் மேல் – அழியாத அலங்காரமாய்
6) எல்லாம் பாவமுமே – அடிமைகளாய் இருங்கள்
7) இளைஞர்களே – தன்னல மறுப்பு தூய வாழ்வு
8) கடவுளுக்கே – அதுவே விலையுயர்ந்தது
9) புல் உலர்ந்து போம் – கவலை கொண்டுள்ளார்



10) நம்பத் தயங்குவோருக்கு – தீயோனை நீங்கள் வென்றுள்ளீர்கள்
11) பிலயாமின் – பெயோரின் மகன்
12) ஆவியில் கடவுளுக்குரிய – சாவுக்குரியவை அல்ல
13) துன்புறுத்தப்பட்டபோது – முடிவு நெருங்கிவிட்டது 1
14) பணிவும் அமைதியுமே – நிலைத்திருங்கள்.
15) ஒருவருக்கொருவர் – பூ வதங்கி விழும்.

**பதில் அனுப்ப வேண்டிய முகவரி**

அருட்சகோதரர் அ.மே. ஜேம்ஸ் தலைமை ஆசிரியர்
தூய பேதுரு விவிலிய போட்டி - 2 (திபா.150)
புனித மிக்கேல் துறவற சகோதரர்கள் இல்லம்,
தாராபுரம், திருப்பூர் மாவட்டம் - 638 656. (செல்.99423 11068)

பதில்களை 26.10.2022 க்குள் அனுப்பி வைக்கவும்.

# தீரத் தியாகி



**(புனித தேவசகாயம் வரலாறு)**

**(வெளியீடு: நெய்தல்வெளி , நாகர்கோவில்)**

- Dr. **தீபக் தாமஸ்,** பல் மருத்துவர், புதுவை.

அன்பு நண்பர் கேட்டதும்
அடக்க முடியவில்லை நீலகண்டருக்கு
அருவியாய் கொட்டித் தீர்த்தார் அவர்.

எல்லாம் இழந்து விடுவேன் போ-ருக்கிறது
எனதருமை நண்பரே!
குடும்பத்திலுள்ளோர்க்கெல்லாம் கடும்பிணி.
கொடூர நோயால் மரணமுற்றன மாடுகள்.
குறைவிலும் குறைவாய்ப் போனது வருமானம்
கோவில் பல ஏறி களைத்துப் போனேன்.
வேண்டாத தெய்வமில்லை, செய்யாத பூசையில்லை.
ஆனாலும் எந்த பிரயோசனமுமில்லை
நா தழுதழுத்து சொன்னார் நீலகண்டர்.

அவர் சொன்னதை உன்னிப்பாய் கேட்டார் டிலனாய்.
அன்பாய் ஆறுதலாய் ஆதரவாய் சொன்னார்
அன்புக்குரிய நண்பரே!
நிரந்தரமற்ற இப்பூலோக சுகங்களுக்காகவா
நீங்கள் இத்தனை கவலை கொள்கிறீர்.
இறைவன் நம் ஆன்மாவை பார்க்கிறார்.
நாமோ அழியும் செல்வங்களை கவனிக்கிறோம்.

அன்பும் பண்பும் ஆன்மாவை வளர்க்கும்
ஆடம்பரம் உடலை சிறப்பிக்கலாம்.
ஊரிலே பெருமை வாங்கி தரலாம்.
ஆனால் ஆன்மாவை அது அழிக்கும்
இறைவன் எனப்படுபவர்
நம் ஆன்மாவை கொண்டே
நம்மை மதிப்பிடுகிறார்.
அழகையோ ஆபரணத்தையோ
கொண்டு அல்ல.
இச்செல்வங்கள் நீர்க்குமிழி போன்றவை.
உருவாகும் பின்பு உடையும்.
உடையும் பின்பு உருவாகும்.
கடவுளே உங்களிடம் கொடுத்தார்.
எடுத்த அவரே மீண்டும் கொடுக்க மாட்டாரா?
யோசித்துப் பாருங்கள் நண்பரே!



உபதேசம் கேட்ட நீலகண்டர்
உள்ளம் சற்றே ஆறினார்.

ஆனால் தோழரே!
கோயிலெல்லாம் ஏறி விட்டேன்.
கடவுளரெல்லாம் தொழுது விட்டேன்.
கருணை மட்டும் கிட்டவில்லையே.
என்ன செய்வேன் நான்? - என
பரிதாபமாய் கேட்டார் நீலகண்டர்.

என் அன்பு நண்பரே!
எத்தனை கடவுள்களை நீர் தொழுதீர்.
இத்தனை கடவுள்கள் உள்ளனர் என்றால்
இத்தனை துன்பம் உமக்கு ஏன்?
ஏகத்துக்கும் ஒரே இறைவனே!
வெவ்வேறு கடவுளர் நமக்கெதற்கு?
வழிபாட்டுக்குரியவர் பரமபிதா மட்டுமே.

பரமபிதா நமக்கு உடலைக் கொடுத்தது.
ஆன்மாவை சுமப்பதற்கே
ஆடம்பரங்களை சுமப்பதற்கல்ல.

தூய்மையான திட மனதை
பெற்றுவிட்டீர்கள் என்றால்
இன்பமும் துன்பமும்
உங்களுக்கு ஒன்றே!

பரமபிதாவிடம் கேளுங்கள் நண்பரே.
துன்பத்தை அவர் தரமாட்டார் என்பதில்லை.
துன்பமற்ற வாழ்க்கை சாத்தியமுமில்லை.
துணிந்து துன்பத்தை தாங்கும்
திட மனதை உங்களுக்கு அருள்வார்.

டிலனாயின் உரையைக் கேட்ட
நீலகண்டர் சற்றே திருப்பதியடைந்தார்.

ஆம் நண்பரே!
இன்பமும் துன்பமும் இணைந்ததே வாழ்க்கை
துன்பமற்ற வாழ்க்கை சாத்தியமுமில்லை
என ஒப்புக்கொண்டார் நீலகண்டர்.
மகிழ்வடைந்த டிலனாய் மீண்டும் சொன்னார்
உங்களுக்கும் எனக்கும் மட்டுமல்ல
உலகத்தோர்க்கெல்லாம் ஒரே இறைவனே!
அவர் சதி செய்வதில்லை, சோதிப்பார்.
இருப்பதெல்லாம் கொடுத்தது அவரே.
எடுத்துக்கொள்ள அவருக்கு உரிமையில்லையா?

தொடரும்....



# வசந்தமாய் வாழ்வு

-அருள்பணி. **M. ஜான் கென்னடி,**
முதல்வர் பொறுப்பு, புனித அந்தோணியார் பள்ளி, நெய்வேலி.

## 85. அன்பு



"பிறரை எடை போடுவதில் காலம் கழிக்காதீர்கள்... அன்பு செலுத்த நேரமிருக்காது" என்கிறார் அன்னை தெரசா. இவ்வுலகில் உள்ள அனைத்து உயிர்களும், தான் அன்பு செய்யப்பட வேண்டும் என்று ஏங்குகிறது. அன்பென்ற அச்சில்தான் இவ்வுலக உயிர்களின் இயக்கம் நடைபெறுகிறது. எல்லா உயிர்களுக்கும், உறவுகளுக்கும் அன்பே அடிப்படை. அன்பு என்பது மனித உள்ளத்தில் தோன்றும் ஒரு மகத்தான உணர்வாகும். அது மனித வாழ்வின் மகிழ்ச்சிக்கும், உறுதித் தன்மைக்கும், வளர்ச்சிக்கும் மூலாதாரம். அன்பு என்பது தொடர்பு. அன்பு என்பது எதிர்பாராமல் எதிர்ப்படுதல். அன்பு என்பது சந்திப்பில் பிறக்கும் சங்கமம்! அன்பு என்பது படைக்கும் திறனுடைய கலை. நேசித்தல் ஒரு வளர்ச்சியாகும்.

தீர்க்கதரிசி எனும் நூலில், கலீல் ஜிப்ரான் அன்பை பின்வருமாறு வரையறுக்கிறார் - 'அன்பு தருவது எதையுமல்ல, தன்னைத் தவிர. எதையும் எடுத்துக் கொள்வதில்லை, தன்னைத் தவிர. அன்பு ஆக்கிரமிப்பதும் இல்லை, ஆக்கிரமிக்கப்படுவதும் இல்லை. அன்பு செலுத்துவது ஒன்றே அன்புக்குப் போதுமானது. தன்னை நிறைவுபடுத்திக் கொள்வது தவிர அன்புக்கு வேறெந்த ஆசையும் இல்லை. அன்பின் திசையை நீங்கள் நிர்ணயித்து விடலாம் என்று நினைக்க வேண்டாம். அன்பு, நீங்கள் தகுதியுடையவரென்று நினைத்தால், அது உங்களைத் தேடி வரும். உங்கள் பாதையை அது நிர்ணயித்து வழிகாட்டும். அன்பைச் சுயமாகப் புரிந்து கொள்ளுதலில் காயம்பட வேண்டும். பிரியும் வேளை வரும் வரை, தன் அடியாழத்தை அன்பு அறிவதில்லை. அன்பு உங்களுக்கு மணிமுடியும் சூட்டும், உங்களை சிலுவையிலும் அறையும், உங்களை வளர்க்கவும் செய்யும், நறுக்கவும் செய்யும்.'

அன்பிற்கு பல முகங்கள் உண்டு. குடும்பத்தினரிடம் காட்டும் அன்பு – பாசம். நண்பர்களிம் காண்பிக்கும் அன்பு – நட்பு. ஆண் பெண் இடையே மலரும் அன்பு – காதல். ஏழை எளியோரிடமும், துன்பப்படுவோரிடமும் செலுத்தும் அன்பு - இரக்கம், கருணை அல்லது மனித நேயம் என்று அறியப்படுகிறது. அன்பு என்ற பண்பே மனிதனை மனிதனாக வாழ வழிவகுக்கும். அன்பை அடிப்படையாகக் கொண்டதே உயிர் நிறைந்த இந்த உடம்பு, அன்பு மட்டும் இல்லையென்றால் இந்த உடம்பு வெறும் எலும்பின்மேல் தோலைப் போர்த்தியது போன்றது ஆகும் என்பதை,

***அன்பின் வழியது உயிர்நிலை அ∴திலார்க்கு***
***என்புதோல் போர்த்த உடம்பு - குறள் 80***

என்கிறார் வள்ளுவர். புனித அகஸ்டினிடம் வந்த ஒருவன், 'நான் படிக்காதவன், வேதக் கருத்துக்களை புரிந்து கொள்ள இயலாதவன். ஆகவே நான் புரிந்துகொண்டு, ஞாபகத்தில் வைத்துக் கொள்ளக் கூடிய வகையில் நம் மதத்தின் சாரத்தை எனக்குச் சுருக்கமாகச் சொல்லுங்கள்' என்றான். அவரோ அவனிடம், 'முதலில் அன்பு செய், பிறகு எது வேண்டுமானாலும் செய்' என்றார். நாம் ஒருவரை அன்பு செய்தால், அவருக்கு தீங்குச் செய்ய மாட்டோம். எவ்வளவுக்கு அதிகமாக அன்பு செய்கிறோமோ அந்த அளவுக்கு தவறு செய்வது முடியாத காரியமாகி விடும்.

அன்பு ஓர் அபூர்வமான சக்தி. உயிரின் உறைவிடமே அன்பு. மனிதர் பாடுபட்டு உழைத்து, நட்டு, வரப்புக்கட்டி நீர் பாய்ச்சாவிடினும் வான் தரும் மழையால் மண்மீது மரங்கள் பலன் தருகின்றன. ஆகவே, எம்மதத்தவராயினும் அவருடைய ஒரே தொழில் அன்பு செய்வதாகத்தான் இருக்க வேண்டும் என்பதை பாரதியார்,

***ஊனுடலை வருத்தாதீர் உணவியற்கை கொடுக்கும்***
***உங்களுக்கு தொழிலிங்கே அன்பு செய்தல் கண்டீர்***

என்று வலியுறுத்துகிறார். எங்காவது மலை கைப்பிடியில் அகப்படுமா? அன்பு என்னும் கைப்பிடியில் இறைவன் என்ற மலையும் அகப்படும் என்றும், குடிசையே ஆனாலும் அன்பிருக்குமானால் அரசனும் விரும்பி நுழைவான் என்பதை வள்ளலார்,

**அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே**
**அன்பெனும் குடில்புகும் அரசே!**

என்று பாடுகின்றார். எத்தனைப் புண்ணிய நதிகளின் தீர்த்தத்தில் குளித்தாலும், அன்பு இல்லாதவன், ஓடும் நீரினை ஓட்டைப் பானையில் முகந்து வைப்பவனே ஆவான் என்பதை,

***கோடித் தீர்த்தம் கலந்து குளித்து அவை***
***ஆடினாலும் அரனுக்கு அன்பு இல்லையேல்***
***ஓடும் நீரினை ஓட்டைக் குடத்து அட்டி***
***மூடி வைத்திட்ட மூர்க்கனோடு ஒக்குமே (தேவாரம்)***

என்று தேவாரத்தில் பாடியுள்ள அப்பர் சுவாமிகள், அன்பினை "ஆற்றல் மிக்க அன்பு" என்பார். இந்நிலவுலகில் அன்பற்றவர் தமக்காகவே பாடுபட்டு மாண்டுபோவார். ஆனால் சிறிதளவேனும் அன்புற்றோர் இறக்கும் வரையில் பிறருக்காகவே வாழ்ந்து மடிவர். இதை வள்ளுவர்,

***அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்***
***என்பும் உரியர் பிறர்க்கு - குறள் 72***

என்கிறார். கோழி தன் குஞ்சுகளை பருந்திடமிருந்து பாதுகாத்தல் ஒரு வெறி. அது பலவீனமானது என்றாலும், தன் குஞ்சுகளின் மீதுள்ள அன்பினால், பாசத்தினால் அந்த பலவீனம் கூட எதிரியைத் தாக்கும் வன்மை பெற்றுயர்கிறது. "உண்மை அன்பு நிபந்தனைகளால் மட்டுப்படுத்தப்படாது. தன்னையே அர்ப்பணிப்பதை உரிமையுடன் கேட்கிறது" என்கிறார் எம். குயஸ்ட். உண்மை அன்பு பரிசுத்தமானது. அது தன்னலம் நாடாது, பிறரின் நலனை முன்னிட்டு தியாகங்கள் செய்யும். அன்பை கொண்டாடுவோம், அன்பை பகிர்ந்து இன்புற்று இருப்போம்.



வசந்தம் வீசும்...



1 **ஒரு குரு தன் சகோதர குருக்களுக்கு...**

**அருட்பணி பியர் கையே** MEP

தமிழாக்கம் **Dr.Sr.M.லில்லி மரி** ME, புதுச்சேரி.

## தமிழாக்க ஆசிரியரின் உரை

புதுவை-கடலூர் உயர் மறைமாவட்டத்தின் முதன்மை குரு பேரருட்திரு அருளானந்தம் அவர்கள் A Priest to His Brother Preist என்னும் நூலைத் தமிழாக்கம் செய்து தருமாறு கேட்டார். நானும் அந்நூலை ஒரளவு அறிந்திருந்ததால் அந்த வேண்டுகோளை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டேன். இதைத் தமிழாக்கம் செய்யத் தொடங்கியதிலிருந்து அதில் புதைந்து கிடக்கும் ஆன்மிகச் செல்வம் குருக்களுக்கு மட்டுமல்ல துறவியருக்கும் குருமாணவர்களுக்கும் பயிற்சியில் உள்ள துறவியருக்கும் மிகவும் பயன்படும் என்பதைப் புரிந்துகொண்டேன். அழைத்தலின் மேன்மையை உணரவும் அதில் பிரமாணிக்கமாக இருக்கவும் நடைமுறையிலான சிறந்த வழி முறைகளை அருட்தந்தை கைய்யே அவர்கள் நம் முன் வைத்துச் சிந்திக்க அழைக்கிறார். குருத்துவத்தின் முதல் கடமை புனிதராக வாழ்வது. குருக்கள், துறவியரின் மாண்பும் மகிழ்ச்சியும் தாங்கள் இறைவனுக்குக் கொடுத்த வாக்குறுதிகளில் பிரமாணிக்கமாக இருப்பதில் அடங்கியுள்ளது என்பதை வலியுறுத்திக் கூறுகிறார். அவற்றை மீறுவது இறைவனுக்கு இழைக்கும் துரோகம் மட்டுமல்ல நமது வாழ்வின் மிக மேன்மையான நிலையில் இருந்து வீழ்ச்சி அடையவும் காரணமாகும் என்பதைத் தெளிவாகக் கூறுகிறார். அவர் உரைகளில் கட்டுக் கதைகளோ கற்பனையான எடுத்துக்காட்டுகளோ இல்லை. ஆனால் MEP குருக்கள் பெற்றுக்கொண்ட குருத்துவப் பயிற்சி ஆங்காங்கே சுட்டிக் காட்டப்படுகிறது. அதில் அவர்கள் தங்கள் பெற்றோரை முழுமையாகப் பிரிந்து செய்த தியாகமும், அவர்கள் ஏழ்மை வார்த்தைப்பாடு கொடுத்த துறவிகளாக இல்லாவிட்டாலும் இயேசுவைப் பின்பற்றிய அவர்களுடைய எளிய வாழ்வும், அர்ப்பண வாழ்வுக்கு வலுவூட்டியதை அறிந்துகொள்ள முடிகிறது. குறிப்பாக அவர்களுடைய வீரமான தியாகத்தால் தங்கள் ஆயருக்குக் கொடுத்த கீழ்ப்படிதல் வாக்குறுதியைக் காக்க மரணத்தையே தழுவிய நிகழ்ச்சி நம் அனைவரையும் மனம் நெகிழச் செய்யும்.

இந்நூல் வெளிவரும் முன் வியாபியின் வாசகர்கள் பயனடையும் பொருட்டு இது வெளியிடப்படுகிறது. வாசித்து நாம் இறைவனுக்குக் கொடுத்த வாக்குறுதியால் நம் திருஅவையும் நாம் சேர்ந்துள்ள துறவற சபைகளும் வளர்ச்சி அடையவும் பெருமைப்படவும் அழைக்கப்பட்ட ஒவ்வொருவருக்காகவும் இறைவனிடம் உருக்கமாக வேண்டுகிறேன். பொது மக்களும் இந்நூலை வாசித்துக் குருக்களின் உன்னதமான அழைத்தலைக் காக்க தங்கள் ஒத்துழைப்பபைத் தரக் கூடும்.

## முன்னுரை

1776- இல் இருந்து பாரீஸ் மறைப்பணிக் குருக்கள் புதுச்சேரி-கடலூர் உயர் மறைமாவட்டத்தில் பணிபுரிந்துள்ளார்கள். ஆயர்கள் பேராயர்கள் என்று Bishop Pierre Brigot முதல் இறுதியாக பொறுப்பில் இருந்த Archbishop Augustin Colas வரை ஒன்பது MEP ஆயர்கள் இம்மறைமாவட்டத்தை நடத்தி வந்தார்கள். 331 MEP குருக்கள் பாரீஸில் இருந்து புதுச்சேரி-கடலூர் உயர் மறைமாவட்டத்துக்கு அனுப்பப்பட்டுப் பணிபுரிந்துள்ளார்கள். இறுதியாக வந்தவர் Rev. Fr. Yves Olivier. இப்படி அனுப்பப்பட்டவர் களில் ஒருவர்தான் Rev. Fr. Pierre Gayet. இவர் 36 ஆண்டுகள் குருமட அதிபராக இடையறாது பணியாற்றியவர்



Rev. Fr. Jacquemart MEP 1954-இல் இந்தியாவில் MEP மாவட்ட அதிபராக இருந்தார். அவர் Fr. Pierre Gayet பற்றி எழுதியது:

1909-இல் சந்திரநாகூர் பங்கில் இருந்து புதுச்சேரி புனித யோசேப்பு பெரிய குரு மடத்துக்கு அதிபராக நியமிக்கப்பட்டார். இவர் அனுபவம் இல்லாத ஓர் இளங்குரு அல்ல, ஆண்டுகள் கடந்தன. மாற்றங்கள் இடம் பெற்றன. குருமடத்துக்குள் வந்த மாணவர்களிலும் வெளியேறிய சிலரிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. பாடங்கள் நடந்தேறின. சில நேரங்களில் ஆசிரியர்களிலும் மாற்றங்கள். கட்டிடங்களிலும் மாற்றங்கள். இல்லம் அமைந்திருந்த இடத்திலும் மாற்றம். அதன் பெயிரிலும் கூட மாற்றம். குறிப்பாகப் பெங்களூருக்கு மாற்றப்பட்டபோது புனித பேதுரு குரு மடம் என்று பெயர் மாற்றப்பட்டது. அன்று முதல் அது மாநில குருமடமாகியது. இந்த எல்லா மாற்றங்களிலும் மாறாது **மூலைக்கல்லாக** நிலைத்து நின்றவர் **"அதிபர் குரு"**, 1945 அவருடைய குருத்துவ பொன்விழாவின்போதும் கப்பலைத் தன் கட்டுக்குள் வைத்திருக்கும் சுக்கான் போல அவர் இருந்தார். பல தலைமுறைகளான அவருடைய பழைய இன்றைய குருத்துவ மாணவர்களும் அவரோடு சேர்ந்து மகிழ்ந்து கடவுளுக்கு நன்றி கூறினர்.

அதே ஆண்டு அவருடைய வயது, உடல் நலக்குறைவு காரணங்களுக்காக அவர் ஓய்வு பெற்றார். கடவுள் அவரை 1952-இல் அழைத்துக்கொண்டார். அவருடைய மறைவுக்குப் பின் அவருடைய குறிப்புத்தாள்களிடையே குருக்களுக்காக அவர் நடத்திய இரு தியானங்கள் கிடைத்தன. அவை தன் மாணவர்களுக்கு அவர் ஏறக்குறைய தினமும் ஆற்றிய ஆன்மிக உரைகளின் குறிப்புகளாகும். அவை அவருடைய மறையுரைகளின் எளிய நடைக்கு எடுத்துக்காட்டுகளாகும். அவை எப்போதுமே நடைமுறைக்கு ஏற்றதாகவும் தந்தைக்குரியதாகவும் இருக்கின்றன. ஆனால் வாசகர்கள் அவருடைய உரைகளில் இருந்த ஆற்றலை அறிய வேண்டும். அவை அச்சு வடிவில் அப்படியே வெளிப்படாது. அவருடைய உரைகளைக் கேட்டவர்களும். அவரோடு வாழ்ந்தவர்களும் எந்த அளவு அவர் தன் போதனைகளை வாழ்ந்திருப்பார் என்று அறிவர். இன்னும் அவர் புனித பேதுரு குருமடத்தில் இருக்கின்றார். அவருடைய உடல் குருமடத்திடலின் மையத்தில் கண்டெடுக்கப்பட்டு மரியன்னையின் திருவுருவச் சிலையின் கீழ் இளைப்பாறுகிறது. அங்குதான் எல்லோரும் சிறிது நேரம் நின்று மண்டியிட்டுச் செபிப்பது வழக்கம். இறந்தும் இன்னும் அவர் பேசுகின்றார். கத்தோலிக்க இந்தியா என்னும் கட்டிடத்தின் ஒரு பகுதியாக இடையறாது இருந்துவருகிறார்.

தொடரும்



# செயலுக்கேற்ற பலன்

– திரு. அல்போன்ஸ் மோசஸ்-புதுச்சேரி-9.

சண்டே மார்க்கட் களைகட்டியிருந்தது. பல விதமான பொருட்களை விற்பதற்கான கடைகள் ஏராளமாக தங்கள் இடத்தைப் பிடித்திருந்தன. தேர்த் திருவிழா போல மக்கள் கூட்டம் அலை மோதியது.

ரொட்டிக் கடை அருகில் தனது பேத்தியுடன் வந்திருந்த ஏழை முதியவர் ஒருவர் கடைக்காரர் உள்ளே சென்ற நேரத்தில் யாரும் பார்க்கவில்லை என்ற எண்ணத்தில் ஒரு ரொட்டியை எடுத்து தனது பையில் வைத்துக் கொண்டார். உள்ளே சென்ற கடைக்காரர் உள்ளே இருந்த சிசி கேமரா மானிட்டரில் அதைப் பார்த்து விட்டார்.

பெரியவர் கடையை விட்டு வெளியே செல்ல திரும்பியபோது வந்த கடைக்காரர், "ஐயா பெரியவரே கொஞ்சம் நில்லுங்கள்'' என்று கூறினார். பெரியவருக்கு தூக்கி வாரிப் போட்டது. பெரியவரின் செயலைக் கவனித்த சிறுமி அந்தப் பையைப் பார்த்து "தாத்தா இது என்ன என்று கேட்க தாத்தா மனம் பதறி கடைக்காரரிடம் என்னை மன்னியுங்கள்'' என்று கேட்டார்.

இதைக் கவனித்தக் கடைக்காரர் அந்தச் சிறுமியைப் பார்த்து, "தாத்தா பணம் கொடுத்து விட்டு மீதியை வாங்க மறந்து விட்டார்'' என்று கூறிக்கொண்டே கொஞ்சம் சில்லறையை அந்தச் சிறுமியிடம் நீட்டினார்.

வயதானவர் கடையை விட்டு வெளியே செல்லும் நேரத்தில் இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ஒருவர் "ஐயா நீங்கள் அரிசிப் பையை மறந்து வைத்து விட்டீர்களே" என்று கூறிக்கொண்டே தன்னிடம் இருந்த அரிசிப் பையையும் அவரிடம் நீட்டினார்.

முதியவர் திருடியதையும் பொருட்படுத்தாமல் அவரை மன்னித்து அவருக்கு உதவிய அந்தக் கடைக்காரர் போலவும் தன்னிடமிருந்த அரிசிப் பையை மனமுவந்து அந்த ஏழை முதியவருக்குக் கொடுத்த அந்த நபரைப் போலவும் பிறருக்கு உதவிட முன்வருவோம். ''கொடுங்கள் அப்போது கொடுக்கப்படும்" (லூக் 6:38). என்ற வேத வசனம் கண்டிப்பாக நிறைவேறும்.

மேலும் நாம் எது செய்தாலும் யாரும் நம்மைப் பார்க்க மாட்டார்கள் என்ற எண்ணத்தை விட்டொழிப்போம். நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் பிரதிபலன் எப்போதும் உண்டு என்பதை மறந்து விட வேண்டாம்.

நம்மைச் சுற்றி உள்ளவர்கள் பார்க்கவில்லையென்றாலும் விண்ணுலகில் இருக்கின்ற நமது பரம தந்தை நம்மை எப்போதும் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றார். நமது செயலுக்கேற்ற பலனை அவர் நமக்கென தயாராக வைத்திருந்து உரிய நேரத்தில் தருவார் என்பதை எப்போதும் மறவாமல் வாழ்வோம்.

# கட்டம் என்னா சொல்லுது?

திரு. ஜெயராஜ் தானியேல்,
முத்தியால்பேட்டை, புதுவை-3



"நான் சொல்லல. கட்டம் சொல்லுது" என்றார் ஜோதிடர்.

"எந்த கட்டம் என்னா சொல்லுதுன்னு யாருக்குத் தெரியும்? ஏதோ எல்லாவிதமான கஷ்டமும் என் தலைல வந்து விடியுதேன்னு சோசியர்கிட்ட வந்தேன். இவர் என்னடான்னா ஏதோ கட்டம் சொல்லுதுன்றாரு" என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டான் டேவிட்.

"தம்பி, இன்னும் ஏழே வருஷம் தான். அப்புறம் பாரு. நீ ஓஹோன்னு வருவ" என்று சொல்லி முடித்தார் ஜோதிடர்.

தலையாட்டிக் கொண்டே சோசியருக்கு கப்பம் கட்டி விட்டு வீட்டுக்கு விரைந்தார் டேவிட்.

வழியில் குழந்தை யேசு ஆலயம் இருந்தது. சரி, இந்தக் குழந்தை யேசுவிடம் குறையை சொல்லலாம் என்று நினைத்து கோவிலுக்குள் நுழைந்தார். நேரே திவ்ய நற்கருணைப் பெட்டி முன்பு நெடுஞ்சாண்கிடையாக விழுந்தார். பிறகு, குழந்தை யேசு பீடத்துக்கு முன் முழந்தாளிட்டு கண்கலங்க தன் குறைகளை சொல்லி ஜெபத்தையும் முடித்து விட்டு வெளியே வந்தார். எதிரே வந்த உபதேசியார் அவரைப் பங்குக்குரு பார்க்க விரும்புவதாக சொல்ல டேவிட்டும் சுவாமியாரின் அறைக்குச் சென்று கதவைத் தட்டினார்.

"யாரது? உள்ள வாங்க. எப்படியிருக்கீங்க டேவிட்?" என்று அவர் கேட்டவுடன் பொலபொலவென்று கண்ணீர் விட்டார் டேவிட்.

"ஏன் அழுறீங்க? அதான் ஜோசியர் கிட்ட கேட்டுகிட்டீங்களே, அப்புறமென்ன? பரிகாரம் ஏதாவது சொல்லியிருப்பாரே? என்று கிண்டலடித்தார் குரு.

"மன்னிக்கனும், சாமி மனசுல பாரம் தாங்கல. எவ்ளோ கஷ்டத்த தான் தாங்குறது. அதான் ஒரு கிலேசத்துல அவராண்ட போய் கேக்க வேண்டியதாச்சு. பரிகாரம் சொன்னாரு. ஆனா செய்யறதுக்கு மனசு வரல. அதான் நம்ப சின்ன சேசுவாண்ட வந்து கொட்டிட்டு போவலாம்னு வந்தேன்".

"இப்படி ஆத்துல ஒரு காலு சேத்துல ஒரு காலுன்னு இருக்கிறவங்கள இயேசு மன்னிக்கமாட்டார். வாழ்ந்தா உறுதியான விசுவாசத்தோட வாழணும். என்னா துன்பம் வந்தாலும் நம்ம இயேசு ராஜா பட்ட பாடுகள நெனச்சு பாத்து அவரைத் துதிக்கணும். அப்ப தான் அவர் நம்மள ஆசீர்வதிப்பாரு. இல்லேன்னா கஷ்டங்க வந்துகிட்டே தான் இருக்கும்."

"மன்னிக்கனும் சாமி. இனிமே இந்த தப்ப செய்யமாட்டேன்".

"சரி, ஒரு ஜெபம் எழுதித் தாரேன். அதைத் தவறாம தினந்தோறும் சொல்லிய பிறகு ஒரு ஜெபமாலை ஒப்புக்கொடுக்க வேண்டும். இதான் அந்த ஜெபம் - "ஆண்டவரே, என் வாழ்வின் ஒவ்வொரு கட்டமும் உமது கையில் உள்ளது. என் எதிரிகளின் கையினின்றும் என்னைத் துன்புறுத்துவோரின் கையினின்றும் என்னை விடுவித்தருளும். (திருப்பாடல் 31:15)" என்றார் பாசமான பங்குகுரு.

குருவானவர் எழுதிக் கொடுத்த ஜெபத்தை வாங்கிக் கொண்டு துள்ளல் நடைபோட்டு வீடு திரும்பினார் டேவிட்.



# 192 வாழ்க்கை பயணம்



திரு B. மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.

**வித்தியாசமான பயணி:** ஆங்கிலேயர் இந்தியாவை ஆட்சி புரிந்த காலத்தில், இன்றைய கர்நாடகா மாநிலத்தில் ஒரு ரயில் ஒரு முனையி-ருந்து இன்னொரு முனைக்கு சென்று கொண்டிருந்தது. ரயில் என்ஜின் எழுப்பிய எச்சரிக்கை ஒ- நடுநிசியின் அமைதியை குலைப்பதாக இருந்தது. ஆனாலும் பயணிகள் பலர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்கள். ஒரு பயணி தன் தலையை ரயில் ஜன்னல் ஓரத்தில் வைத்து உறங்கிக் கொண்டிருந்தார். அவர் தன் உறக்கத்தி-ருந்து திடீரென்று விழித்தெழுந்தார். இருக்கையி-ருந்து குதித்து சென்று அபாய சங்கி-யை இழுத்தார்! உடனே ரயிலும் கிரீச்சிடும் ஒ-யுடன் நின்றது. ரயி-ல் இருந்த பயணிகள் அவர் இருந்த பெட்டி அருகே குழுமினர். அந்த மனிதர் அபாய சங்கி-யை ஏன் இழுத்தார் என்று வினவினர். அந்த மனிதர் அமைதியாக தங்களுடைய ரயிலுக்கு முன்னால் சில மீட்டர் தொலைவில் தண்டவாளத்தில் பிளவு ஏற்பட்டிருப்பதாக சொன்னார். ஆனால் மக்கள் நம்பத் தயாராக இல்லை எனவே அவர் அவர்களை சிறிது தூரம் சென்று தண்டவாளத்தை பரிசோதிக்குமாறு கூறினார். அவர்கள் சென்று பார்த்தபோது அவர்களுக்கு ஆச்சரியம் காத்திருந்தது. ரயில் தண்டவாளத்தில் உண்மையிலேயே பிளவு ஏற்பட்டிருந்தது! அந்த மனிதர் உறங்கிக் கொண்டிருந்தபோது, ரயில் தண்டவாளத்தில் சென்று கொண்டிருந்தபோது ஏற்பட்ட அதிர்வு அலைகள் சிறிது மாறுப்பட்டது. எனவே அந்த மாற்றத்திற்கு காரணம் ரயில் தண்டவாளத்தில் ஏற்பட்ட விரிசலே என்றுணர்ந்தார்.

**சர் விஸ்வேஸ்வரய்யா:** அந்த இரவில் அத்தனை உயிர்களை காப்பாற்றிய அந்த மனிதர்தான் பாரத் ரத்னா விருது பெற்ற சர்.விஸ்வேஸ்வரய்யா! 1860 ம் ஆண்டு செப்டம்பர் 15ம் நாள் பிறந்த இந்தியாவின் தலை சிறந்த கட்டிட பொறியாளர். இவருடைய கட்டிட திறமைக்கு எடுத்துக்காட்டு மைசூரில் உள்ள கிருஷ்ணராஜசாகர் அணைக்கட்டு. இந்நாட்டின் வளர்ச்சியில் 20ம் நூற்றாண்டில் பெரிதும் உதவிய பெருமைமிக்க முதன்மையான தலைவர்களுள் ஒருவராக கருதப்படுகிறார். இவர் சேவையை பாராட்டி இவர் பிறந்த தினமான செப்டம்பர் 15ம் நாள் பொறியாளர் தினமாக இந்தியா கொண்டாடுகிறது.



**பயணம்:** நம் வாழ்க்கை பயணத்தில் நாம் உறங்கிவிடும் போதும், இருளில் செல்ல நேர்ந்தாலும் நம் இறைவன் விழித்திருந்து நம்மை வழி நடத்துகிறார். நம்மை காக்கும் கரங்கள் நம்மை கைவிடுவதில்லை. நம் வாழ்வில் சிறு தடைகள், விரிசல்கள் ஏற்படும்போதெல்லாம் நம்மை எச்சரித்து எழுப்பி விடுகிறார். நம் வாழ்வில் ஏற்படும் அதிர்வுகளை நாம் எச்சரித்து எழுப்பி விடுகிறார். நம் வாழ்வில் ஏற்படும் அதிர்வுகளை நாம் உணரும் முன்பே நமக்கு தெரியப்படுத்துகிறார்.

# 2–ம் எ–சபெத் அரசி இயற்கை எய்தினார்



விண்ணக மண்ணக அரசியாம் அன்னை மரியாவின் பிறப்பு விழா (08.09.2022) அன்று, "சூரியன் மறையாத நாடு" எனப்படும் பிரித்தானிய நாட்டின் அரசி 2-ம் எலிசபெத் அவர்கள் இயற்கை எய்தினார். அவருக்கு வயது 96. 21 ஏப்ரல் 1926ம் ஆண்டு பிறந்த அவர், 20 நவம்பர் 1947ம் ஆண்டு கிரீஸ் நாட்டு இளவரசர் பிலிப்பை மணந்து கொண்டார். சார்லஸ், அன்னா, ஆன்ட் மற்றும் எட்வர்டு எனும் நான்கு பிள்ளைகளைப் பெற்றெடுத்தார். தன் தந்தை, அரசர் 6-ம் ஜார்ஜ் அவர்களின் மறைவிற்கு பின் பிப்ரவரி 6 1952 அன்று அரசியாக பொறுப்பேற்றார். உலக வரலாற்றிலேயே 70 ஆண்டுகள் அரசியாக பதவி வகித்தவர் என்ற சாதனையைப் படைத்திருக்கிறார்.

8 செப்டம்பர் 2022 அன்று, மருத்துவர்கள் கவலை தெரிவித்ததை அடுத்து, எலிசபெத் பால்மோரல் கோட்டையில் மருத்துவக் கண்காணிப்பில் இருப்பதாக பக்கிங்காம் அரண்மனை அறிவித்தது. மருத்துவர்கள் அவரது உடல்நிலையில் அக்கறை கொண்டு, அவர் மருத்துவ மேற்பார்வையில் இருக்குமாறு பரிந்துரைத்துள்ளனர். பால்மோரலில் தங்கியிருந்த அவர் அன்று அதிகாலை 12.30 மணிக்கு இயற்கை எய்தினார்.

அரசியின் மறைவிற்கு "சர்வவியாபி" இரங்கலையும், செபங்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

## விண்ணக வாழ்வின் 11-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு: 14-06-1936



இறப்பு: 21-09-2011

**திரு. S. மரிய ஞானம்**

என் ஜீவியத்தில் என்னை நேசித்தவர்களே, உங்கள் அனுதின செபத்தில் என்னை நினைத்தருளுங்கள்.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 21-09-2022 புதன்கிழமை காலை 6.00 மணிக்கு முத்தியால்பேட்டை, புனித ஜெபமாலை அன்னை ஆலயத்தில் நிறைவேற்றப்படும் திருப்ப-யில் பங்குகொண்டு செபிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**பிரிவால் துயருறும்**
மகன்: **M. மங்களதாஸ்**
முத்தியால்பேட்டை.

## விண்ணக வாழ்வின் 2-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



**திரு.A.ஆரோக்கியநாதன்** M.Sc.,B.Ed.,
B.T.Asst.,Don Bosco Hr.Sec.School, Polur.

மண்ணில்
**20.05.1973**

விண்ணில்
**18.09.2020**

"இறந்தோரைப் பற்றி நீங்கள் அறிந்திருக்க வேண்டும் என நாம் விரும்புகிறோம்! எதிர்நோக்கு இல்லாத மற்றவர்களைப் போல நீங்களும் துயருறக்கூடாது. இயேசு இறந்து உயிர்த்தெழுந்தார் என நாம் நம்புகிறோம் அப்படியானால் இயேசுவோடு இணைந்த நிலையில் இறந்தோரைக் கடவுள் அவருடன் அழைத்து வருவார்" - 1தெச 4:13-14.

நித்தம் நித்தம் உன் நினைவுகளை
நெஞ்சமதில் ஏந்திக் கொண்டு
நாட்களைக் கடத்தினோம் ஒருவாறு
நாட்காட்டிக் காட்டுதே ஈராண்டு!

எதிர்பாரா தருணம், நேர்ந்த மரணம்
எம் மனதில் ஏற்படுத்தியே ஆறாத ரணம்
நீயிருந்தாய் நெஞ்சி-ருந்தது பெருமை
நீ மறைந்தாய் வாழ்வே ஆனது வெறுமை!

பெற்ற அன்னையின் தொடர் அழுகையும்
உற்ற மனைவி பிள்ளைகளின் துயரமும்
உடன் பிறந்தோர் உறவுகளின் கண்ணீரும்
உம்மை எட்டாமல் போனதேன் நாதா!

அறுவர் நாம் பிறந்து வளர்ந்தோம் - அதில்
இருவராய் இணைந்து இருந்தோம் - எனை
ஒருவராக்கி தவிப்பில் விட்டு சென்றாயே
ஊர் முழுதும் தேடுகின்றோம்! வாராயோ?

அழுதிடும் மனதிற்கும் தொழுதிடும் உள்ளத்திற்கும்
ஆறுதல் தரும் மந்திரம் "இறைவனின் சித்தமிது"
உயிர்ப்பு உண்டென உரைத்தனன் நம் தேவன்
உன்னத எதிர்நோக்கில் தொடருதே எம் ஜீவன்.

**பிரிவால் துயருறும்**

தாய்: V. **அருணோதயமரி** Rtd.HM
மனைவி: S. **சகாய அனுசுயா** D.T.Ed.,
பிள்ளைகள்: A.அமலபால்ராஜ், A.மரியசெ-ன்
உடன் பிறந்தோர், உறவினர்கள்.

**நினைவு திருப்ப-:** இடம்: **புனித அந்தோணியார் ஆலயம், கண்டாச்சிபுரம் வட்டம்,ஆயந்தூர்**
நாள்: 18-09-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி.

## விண்ணக வாழ்வின் 31-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 11.06.1949



மறைவு: 01.10.1991

**திருமதி. அல்போன்சா மரி பரிமளா**

**சீவியத்தில் என்னை நேசித்தவர்களே, மரணத்திலும் என்னை மறவாதீர்கள்**

01-10-2022 சனிக்கிழமை காலை 6.15 மணிக்கு புதுவை, புனித ஜென்மராக்கினி அன்னை பேராலயத்தில் திருப்ப- நிறைவேற்றப்படும். இதைக் கண்ணுறும் அனைவரும் இவரது ஆன்ம சாந்திக்காக செபிக்க வேண்டுகிறோம்.

**பிரிவால் துயருறும்**

**ராஜீ செல்வநாதன்**
**நவீன், சாந்தினி, ராகினி**

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு

"அந்த நீதிமான் குறுகிய காலத்தில் நிறைவு எய்தினார். நீண்ட வாழ்வின் பயனை அடைந்தார். அவரது ஆன்மா ஆண்டவருக்கு ஏற்புடையதாய் இருந்தது." - சாஞா 4:13-14.



**P.LOURDEMARIE HENRIETTE MARCELINE**

மண்ணில்
**27-03-1954**

விண்ணில்
**20-09-2021**

ஜெபம்

அன்பின் ஊற்றே இறைவா! இவ்வுலகில் எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து, எங்கள் வாழ்விற்கு வழிகாட்டியாய் இருந்து, எங்களுக்கு இறை பக்தியையும், நல்ல பண்புகளையும் ஊட்டி வளர்த்த தியாக உள்ளம் கொண்ட எங்கள் அன்பு தாய்

**P. MARCELINE**

அவர்களின் ஆத்துமத்திற்கு நித்திய இளைப்பாற்றியையும், முடிவில்லா பிரகாசத்தையும் தந்தருள உம்மை இறைஞ்சி வேண்டுகிறோம்.

திருப்ப- : 20-09-2022 செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணிக்கு புதுவை, நெல்-த்தோப்பு, புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்திலும்,

மதியம் 12.00 மணிக்கு புதுவை, திரு இருதய ஆண்டவர் பசி-க்காவிலும் திருப்ப- நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்

கணவர் : **R. Pushparaj**

தாய், மகன், மகள்கள், மருமகன், மருமகள், தங்கைகள், தங்கை பிள்ளைகள், தம்பி, மருமகள்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.

## விண்ணக வாழ்வின் இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்ச-

மண்ணில்: 25.03.1931



விண்ணில்: 16.09.2020

**திருமதி A. மங்கள மரி**

(w/o. அந்தோணி மரியதாஸ் (லேட்) Rtd.Tr.)

*"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவா 11:25*

இவரின் ஆன்மா இறைவனை முகமுகமாக தரிசிக்க உங்களின் ஜெப உதவியை வேண்டுகிறோம்.

திருப்ப- இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 16-09-2022 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு நங்காத்தூர், புனித பெரியநாயகி அன்னை ஆலயத்தில் திருப்ப- நிறைவேற்றப்படும்.

**பிரிவால் வருந்தும்**

மகன்கள் - மருமகள்கள்
மகள்கள் - மருமகன்கள்
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், சகோதரிகள், குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள்.

## விண்ணக வாழ்வின் நான்காம் ஆண்டு நினைவு அஞ்சலி

மண்ணக பிறப்பு :16-10-1956



விண்ணக பிறப்பு :25-09-2018

திருமதி அ.ரோஸ்லின் மேரி

ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாகத் திகழ்வாய்.
உன் கடவுளின் கரத்தில் அரச மகுடமாய் விளங்குவாய்
- எசாயா 6:23

தன்னிகரில்லாத் தலைமையும்
தகுதியுடை தாய்மையும்,
தரமுடை கொள்கையும்
தனித்துவ குணமும்
தடைகளைத் தகர்த்தெறியும்
தளர்ந்திடா உள்ளமும்,
தாயின் உருவிலே
கிடைத்ததே எம் பாக்கியம்

என்றும் உம் நினைவில் வாழும்
கணவர்: **திரு. தா. அருளப்பன்**
மகன்: அருட்தந்தை **அ. ஸ்டீபன் சகாயதாஸ்**
**மகள்கள், மருமகன்கள், பேரப்பிள்ளைகள்,**
**உறவினர்கள் மற்றும் நண்பர்கள்.**

**திருப்பலி**

25-09-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு, நெய்வேலி-1 இந்திரா நகர், புனித குழந்தை இயேசு ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும்.

## விண்ணக வாழ்வின் 2-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

மண்ணில் மலர்ந்தது : 24-02-1948



விண்ணில் மலர்ந்தது : 25-09-2020

திரு. மை. அந்தோணி மார்டின்

ஆண்டவர் தம் ஊழியரின் உயிரை மீட்கின்றார், அவரிடம் அடைக்கலம் புகும் எவரும் தண்டனை அடையார் - திபா 34:22

அமைதியாக வந்த அழைப்பு - எமை
அலைகழித்து சென்றதென்ன?
கண்ணீரில் உனை நனைத்து
கல்லறையில் வைத்தாலும் - எம்
உ(ள்)ள அறையில்
நீங்காது நிலைத்திருக்கும் - எம்
இல்லத் தலைவரே! நற்செய்திச் சுடரே!




உம் சுவாசத்தையே பாசமாக்கினீர்
உம் தெய்வ பக்தியால் எங்களை
விசுவாசி ஆக்கினீர்...!
உம் நன்னடத்தையால் எங்களை
நல்ல சமாரியன் ஆக்கினீர்!
இந்த ஆசீருக்குத் தகுந்தவர் நீர் என்று
என்றும் நினைவில் நிறுத்தி செபிக்கின்றோம்.

**செபம்:** "ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம்" என்ற அன்புத் தந்தையே தனது குடும்பப் பணியிலும் ஆன்மிகப் பணியிலும், அரசு பணிகளிலும், இறை பயத்துடன் பணியாற்றி தனது கடின உழைப்பாலும் நற்பயன் மிக்க செயல்களாலும் அனைவர் மனதிலும், நீங்கா இடம் பெற்ற உமது தாசருக்கு நித்திய இளைப்பாற்றியை வழங்கியருளும்.

ஆண்டவரே முடிவில்லாத ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக!

**பிரிவால் வருந்தும்**
**அன்பு மனைவி**
**மகன்கள், மருமகள்கள்,**
**பேரப்பிள்ளைகள்**
**மற்றும் உறவினர்கள்.**

# அருள்தந்தை R. அந்தோணி லூர்துராஜ் அடிகளார் இறையடி சேர்ந்தார்



கடலூர் புனித கார்மேல் அன்னை ஆலயப் பங்குத்தந்தையும், கடலூர் மறைவட்ட முதன்மை குருவுமான அருட்தந்தை R. அந்தோணி லூர்துராஜ் அவர்கள் 07.09.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

**பிறப்பு:** அருட்தந்தை அவர்கள் 02.05.1963ல் கூனங்குறிச்சியில் திரு. ராஜரத்தினம், திருமதி. லூர்துமரி அவர்களின் மகனாக பிறந்தார். தொடக்கக்கல்வி மற்றும் இடைநிலைக் கல்வியை கூனங்குறிச்சியிலுள்ள R.C இடைநிலைப்பள்ளியில் பயின்றார். 1973 -1980 வரை தனது 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு படிப்புகளை திண்டிவனத்திலுள்ள புனித அன்னாள் மேல்நிலைப் பள்ளியில் பயின்றார்.

**கல்வி:** 1980 ம் ஆண்டு கடலூர் புனித ஆக்னஸ் இளங்குருமடத்தில் சேர்ந்தார். 1982 முதல் 1990 வரை சென்னை பூந்தமல்லியிலுள்ள திருஇருதய குருத்துவ கல்லூரியில் தத்துவவியல் மற்றும் இறையியல் படிப்புகளை பயின்றார். 1990ம் ஆண்டு மே 22ம் தேதி புதுவை - கடலூர் உயர்மறைமாவட்டத்திற்காக மேதகு V.S. செல்வநாதர் அவர்களால் குருவாக அருட்பொழிவு செய்யப்பெற்றார்.

**பணியிடங்கள்** 1990 முதல் 1991 வரை புதுவை, புனித ஜென்மராக்கினி அன்னை பேராலயத்தின் உதவிப் பங்குத்தந்தையாகவும், 1992 ஜனவரி முதல் ஜூன் வரை 5 1/2 மாதங்கள் கடலூர் புனித வளனார் பள்ளியில் உள்விடுதிக் காப்பாளராகவும், 1992 -1993 வரை நெல்லித்தோப்பு உதவிப் பங்குத்தந்தையாகவும் பணியாற்றினார்.

1993 -1994 வரை ஒதியத்தூர் பங்குத் தந்தையாகவும், 1994 - 2002 வரை பாத்திமாபாளையம் பங்குத்தந்தை யாகவும், அதே நேரத்தில் 25.04.1996 முதல் 25.06.1996 வரை சின்னசேலம் பங்கின் தற்காலிக பொறுப்பு பங்குத்தந்தையாகவும் பணியாற்றினார். 2002 முதல் 2006 வரை மேல்நாரியப்பனூர் திருத்தலத்தின் அதிபராகவும், 2006 முதல் 2013 வரை ஏற்காடு சான் ஜோஸ் எஸ்டேட்டின் மேனேஜராகவும், 2013 -2018 வரை காரைக்கால் பங்குத்தந்தையாவும், மறைவட்ட முதன்மை குருவாகவும் பணியாற்றிய அதே நேரத்தில் 02.04.2016 -10.06.2016 வரை கோட்டுச்சேரி பங்கின் தற்காலிக பொறுப்பாளராகவும், மேலும் 2018 முதல் 2022 வரை கடலூர் புனித கார்மேல் அன்னை ஆலயத்தின் பங்குத் தந்தையாகவும் மறைவட்ட முதன்மை குருவாகவும் பணியாற்றி வந்தார்.

கடந்த சில மாதங்களாக உடல்நிலை சரியில்லாத நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். 07.09.2022 அன்று அதிகாலை 1.25 மணிக்கு சிகிச்சை பலனின்றி அருட்தந்தை அவர்கள் இறைவனடி சேர்ந்தார். பேராயர் இல்லத்தில் அருட்தந்தையின் உடலுக்கு இறைமக்கள் அஞ்சலி செலுத்தினர். பின் மாலை 4.00 மணிக்கு மேதகு பேராயர் பிரான்சிஸ் கலிஸ்ட் அவர்களால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு குருக்களின் கல்லறையில் அருட்தந்தையின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அருட்தந்தை. P. ரொசாரியோ, புனித ஆக்னஸ் இளங்குருமட அதிபர் அவர்கள், அருட்தந்தை. அந்தோணி லூர்துராஜ் அவர்கள் இறைவனோடு இணைந்திருந்ததால் இறைவனோடு வாழ்கிறார். இன்றைய கட்டளை செபத்தில் யோபு புத்தகத்திலிருந்து கொடுக்கப்பட்ட வாசகம் அருட்தந்தை அவருக்காகவே கொடுக்கபட்டது போல் உள்ளது "என் தாயின் கருப்பையினின்று பிறந்த மேனியனாய் யான் வந்தேன், இறைவன் திருமுன் பிறந்த மேனியனாய் யான் செல்வேன்" அருட்தந்தையை கடவுள் நமக்குக் கொடுத்தார், இன்று கடவுளே மீண்டும் எடுத்துக்கொண்டார். நடுநிலை தவறாமல், தான் செல்லும் பங்குகளிளெல்லாம் தன் பணியின் அடையாளத்தை விட்டுவருபவர். திருச்சபைக்கும், திருச்சபையின் சட்டதிட்டங்களுக்கும் பிரமாணிக்கமாய் இருந்தார். அனைத்தையும் அணுஅணுவாய் பார்த்து செய்தவர், தன் உடல்நலத்தை பார்க்க மறந்துவிட்டார். இயேசு 30 ஆண்டுகள் மறைந்த வாழ்வு, 3 ஆண்டுகள் பொதுவாழ்வு வாழ்ந்தார். அருட்தந்தை அவர்கள் 3 ஆண்டுகள் உதவிகுருவாக மறைந்த வாழ்வும், அதன்பின் 30 ஆண்டுகள் பங்குத்தந்தையாக பொதுவாழ்வும் வாழ்ந்தார். பல பங்குகளுக்கு அடையாளத்தை வழங்கியவர் அவர். அவர் இறைவனுக்கு உண்மையுள்ளவராக தன் கடமைகளை நிறைவேற்றினார், மக்கள் பார்க்க வேண்டும், புகழ வேண்டும் என்று அவர் ஒருபோதும் தன் பணிகளை செய்ததேயில்லை. எனவே அவரை நம் இதயத்தில் வைத்து அவருக்காக இரக்கம் நிறைந்த இறைவனிடம் மன்றாடுவோம்" என்று மறையுரையாற்றினார்.

70க்கும் மேற்பட்ட குருக்களும், அருட் கன்னியரும் மற்றும் திரளான இறைமக்களும் அடக்கத்திருப்பலியில் கலந்துகொண்டு அருட் தந்தையின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபித்தனர்.

***நித்திய இளைப்பாற்றியை அருளும் ஆண்டவரே.***

**Published and Printed by Very Rev. Msgr. A. Arulanandam on behalf of Most Rev. Dr. A. ANANDARAYAR, D.D.,D.C.L.,**
Archbishop of Pondicherry & Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001.
Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: Very Rev. Msgr. A. Arulanandam. Manager : Very Rev. Msgr. A. Arulanandam.